1973 பிப்ரவரி 7]

பரம்பரையாக பெரும் பெருச்சாளிகள் தின்ற இடம். ஆகவே கட்டுப்பாடு வேண்டும். ஒவ்வொரு ஆண்டும் கணக்குக் கொடுத்து வந்தால், ஓரளவு நன்ருகக் கண்காணிக்கப்பட்டு வந்திருக்கும். நம் உணவுத் துறை அதிகாரிகள் கஷ்டப்பட்டு நல்ல முறையில் கவனித்து வருகிருர்கள்.

திரு. எஸ். ஜெயராம ரெட்டியார் : தலைவர் அவர்களே, நான் கேட்ட கேள்வியானது மழை காலத்தில் கொள்முதல் செய்யப் பட்டதை முதலில் வினியோகம் செய்ய வேண்டும். மந்திரி அவர்கள் முன்னுல் வாங்கியதை முன்னுலும் பின்னுல் வாங்கியதைப் பின்னுலும் கொடுக்கிருேமென்று சொன்ருர்கள். மழை காலத்தில் வாங்கியதை முன்னுலேயே கொடுக்கச் சொல்கிருேம்.

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : கோடவுனில் 'செக்' செய்கிருேம். நல்லது கெட்டதைப் பார்த்துக் கொடுக்கிருேம். எடை குறைவானுல், நல்ல அரிசி, கெட்ட அரிசி என்று பார்க்க முடியாது. எடை குறைவு எல்லாவற்றிலும் வரும்.

Products of the Tamil Nadu Khadi and Village Industries Board

* 61. Q.—THIRU V. ISVARMURTI: Will the Hon. the Minister for Food be pleased to state whether any investigation into the market potentialities of the products of the Tamil Nadu Khadi and Village Industries Board has been undertaken in this State?

தமிழ்நாடு கதர்-கிராமத் தொழில்கள் வாரியப் பொருள்கள்

திரு. வ. ஈஸ்வரமூர்த்தி : மாண்புமிகு உணவு அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினுவிற்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

தமிழ்நாடு கதர்-கிராமத் தொழில்கள் வாரியப் பொருள் களின் விற்பனை வாய்ப்புகள் குறித்து இம் மாநிலத்தில் ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளதா ?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : மாவட்டக் கதர்-கிராமத் தொழில் அதிகாரிகள், தங்கள் மாவட்டங்களில் கதர்-கிராமத் தொழில்கள் வாரியத் தயாரிப்புப் பொருட்களின்

விற்பனை வாய்ப்புகளைப்பற்றி ஆய்வு செய்து தேவைப்படும் பொருள்களை உற்பத்தி செய்வதற்காக அவர்களது தேவைக் குறிப்புப் பட்டியல்களை அனுப்பி வைக்கின்றனர். கதர்-கிராமத் தொழில்கள் (விற்பனை) துணை இயக்குநர், கதர்-கிராமத் தொழில் உற்பத்திப் பொருள்களின் விற்பனையை உயர்த்துவதற்கான வழிவகைகளைக் கண்டறிகிறார்.

மாண்புமிகு சட்ட மன்றத் துணைத் தலைவர் : வினாக்கள் 62 முதல் 65 வரை ஒத்திவைக்கப்படுகின்றன.

வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[**குறிப்பு**.—ஓர் உரையின் தொடக்கத்தில் இடப்பட்டிருக்கும் உடுக் குறி (*) அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

2. ஒற்றிவைப்புத் தீர்மானம்.

மாநில முழுவதும், குறிப்பாக தஞ்சை மாவட்டத்தில் மின் சப்ளை நிறுத்தப்படுவதால் ஏற்பட்டிருக்கும் பாதிப்பு குறித்து.

மாண்புமிகு சட்ட மன்றத் துணைத் தலைவர் : அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த கீழ்க்கண்ட திட்டவட்டமான பொருள் குறித்து விவாதிப்பதற்கென, மேலவையின் அலுவல்களை ஒத்தி வைக்கக் கோரும் பிரேரணை ஒன்றை திரு. என் சுந்தரேசத் தேவர், எம்.எல்.சி., அவர்கள் தந்துள்ளார்கள் :—

"மாநில முழுவதும், குறிப்பாக தஞ்சை மாவட்டத்தில், கடந்த ஒரு வார காலமாக மின் சப்ளை இரவு, பகல் நிறுத்தப் படுவதால், தொழில்கள், விவசாயம், வீட்டு உபயோகங்களுக்குப் பெரும் பாதிப்பு ஏற்பட்டு, மக்களுக்குப் பெரும் கஷ்டத்தையும் நஷ்டத்தையும் ஏற்படுத்தியுள்ளது குறித்து."

திரு. சுந்தரேசத் தேவர் அவர்களை இது எவ்வாறு அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த விஷயம் என்றும், விதிகளின் கீழ் எவ்வாறு வரும் என்றும் விளக்குமாறு கோருகிறேன்.

திரு. என். சுந்தரேசத் தேவர் : தலைவர் அவர்களே, கடந்த ஒரு வாரத்திற்கு மேலாக மாநிலம் பூராவும் மின்சார வெட்டு அமுல் என்று வந்தபோதிலும் கூட, சுத்தமாக மின்சாரம் வராமல்